**கடுகண்ணாவ நகர சபை - 2022**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுகண்ணாவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுகண்ணாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

-

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 130,465 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 49,392 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பரீட்சித்துப் பார்த்து எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்வதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 மார்ச் 13 ஆம் திகதி ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 97,875 நிழற்பட பிரதி இயந்திரத்தின் பெறுமதி மீளாய்வாண்டின் போது கணக்கில் இருந்து அகற்றப்பட்டு இருக்கவில்லை | அடுத்த ஆண்டின் போது கணக்கீடு செய்வதாக | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் உக்கும் கழிவுகள் விற்பனையால் கிடைத்த வருமானம் முறையே ரூபா 215,678 மற்றும் ரூபா 431,547 வைப்பு கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது | வருமானம் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டதாக | வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 771,252 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பயன்பாட்டு பதிவேடுகள் சரியாக இருக்க வேண்டுமென | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,898,130 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 104,220 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,000,000 | 7,646,784 | 7,753,822 | 6,773,112 | 8,000,000 | 7,574,636 | 7,649,538 | 6,880,150 |
| (ii) | வாடகை | 3,475,000 | 3,347,446 | 3,505,947 | 1,464,511 | 5,220,000 | 2,749,815 | 2,230,597 | 1,623,012 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 750,000 | 695,469 | 691,969 | 29,500 | 770,100 | 567,096 | 541,396 | 26,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,600,000 | 9,596,770 | 2,192,605 | 7,785,764 | 14,700,000 | 1,683,876 | 1,561,976 | 381,599 |
| | | 25,825,000 | 21,286,469 | 14,144,343 | 16,052,887 | 28,690,100 | 12,575,423 | 11,983,507 | 8,910,761 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 6,773,112 ஆக இருந்ததுடன் அலகொன்றில் வீதவரி நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 266 அலகுகளில் மொத்தம் 2,162,210 ஆக இருந்தது. | ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| (i) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு 15 சபை ஆதனங்களிலிருந்து ரூபா 1,219,860 ஆன நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வாடகை அறவிடப்படவேண்டும். |
| (ii) ரூபா 401,228 ஆன நிலுவை கடை வாடகை செலுத்தாத 03 வியாபார தொகுதிகளின் 12 கடைகளுக்குரிய நிலுவை வாடகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | | - மேற்படி - |

**(இ) அனுமதிப்பத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| 34 வியாபார நிலையங்களுக்காக வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்காமை காரணமாக ரூபா 29,500 ஆன வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ஒன்றும் ரூபா 98,200 ஆன வியாபார வரி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அனுமதிபத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 337,500 ஆன நிலுவை விளம்பர பதாகை கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | செலுத்தாத விளம்பர பதாகைகள் கலட்டி அகற்றுவதாகவும் நிலுவையை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியுள்ளதாகவும் | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,749 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 7,187,000 ஆக இருந்தது. | பரீட்சித்து பாரத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீதிமன்ற தண்டப் பணத்தையும் நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 118 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மல கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை குறித்த காலப்பகுதியில் | எதிர்காலத்தில் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சுத்திகரித்தல் மற்றும் வெறுமையாக்குவதற்கும் முடியுமான வகையில் கலி வண்டி சேவை ஒன்றை பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | சுடலைசாலையில் காணப்படும் விறகு அடுப்பு 1 ½ ஆண்டுகளாக செயலற்று காணப்படுவதுடன் விறகு அடுப்பு திருத்தம் செய்யப்பட்டு அல்லது LP கேஸ் பயன்படுத்தியோ உடல்கள் தகனம் செய்யும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்து வதற்கு நடவடிக்கை எடுக்காமல் சுடலைசாலையின் வேலி நிர்மாணத்திற்காக முன்னைய ஆண்டின் போது 1,799,975 செலவிடப்பட்டு இருந்தது. | விரைவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும் |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 8000 அடி அளவிலான பழுதடைந்திருந்த உரக் களஞ்சியத்தை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தும் நோக்கில் உடன்படிக்கை மேற் கொள்ளாமல் ரூபா 1,166,400 ஆன வைப்பொன்றும் மாதாந்த வாடகை ரூபா 194,401 என மொத்தம் ரூபா 1,360,801 தொகை புகையிரத திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்கட்டிடம் மீண்டும் புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப் பட்டிருந்ததுடன் சபை செலுத்திய வைப்புத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை | குறித்த கட்டிடத்தை புகையிரத திணைக்களத்திற்கு கையளித்துள்ளதாக | கொடுப்பனவு செய்த பணத்தை விரைவில் அறவிடல் வேண்டும் |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிர்மாண கடன்பட்டோர் மீதி ரூபா 362,447 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மொத்தம் ரூபா 235,234 ஆக இருந்தது. | கணக்காய்வு விசாரணையொன்ற உள்ளதால் மீள் நிரப்புவதற்கு அல்லது கொடுப்பனவு செய்ய செய்யப்படவில்லை என்பதாக | சரி செய்யப்பட்டு பெறவேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவின கடன்கொடுத்தோர் மீதி ரூபா 8,752,313 ஆக இருந்ததுடன் ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மொத்தம் ரூபா 1,087,414 ஆகவும் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 202,302 ஆக இருந்தது | பட்டியல் இதுவரை கிடைக்கவில்லை என்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய வாகனம் ஒன்று 2022 ஜனவரி 12 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டு 2022 பெப்ரவரி 11 ஆம் திகதி திருத்த வேலைகளுக்காக கராஜ் ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் காப்புறுதி மேவுகை ரூபா 199,975 கிடைத்திருந்தும் வாகனத்தை திருத்தி சபைக்கு கொண்டு வராமல் தனியார் கராஜ் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டு அடுத்து வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு உரிய பழுதடைந்த 03 வாகனங்களை திருத்தம் செய்யப்படாமல் பழைய சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | மதிப்பீட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டு அடுத்து வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுக்க வேண்டும் |
| (இ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்த ரூபா 357,579,250 பெறுமதியான 04 காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்காக உரிய தரப்பினர் அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | காணிகளின் உரித்து கையளிக்கப்பட வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது அதில் 11 பதவிகளில் 20 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 17 மிகைகளும் காணப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வெற்றிடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதெனவும் மிகை பதவியணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவர். | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற இடமாற்றம் பெற்றுச் சென்ற 5 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து மொத்தம் ரூபா 423,253 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |
| **(இ)** 2018 ஜனவரி 24 ஆந் திகதி 2/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச ஊழியர்களின் இயலுமையை மேம்படுத்துவதற்காக மனிதவளத் திட்டமொன்றும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையும் கைச்சாத்திட வேண்டிய போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டில் தயாரிக்கப் பட்டிருந்த பாதீட்டில் உள்ள மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களுக்காக உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 03 வருமான விடயங்களில் 29 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையிலும் | கொடுப்பனவு குறைத்த மேற்கொள்ளல், எதிர்பார்த்த நிகழ்ச்சிகள் நடாத்தப் படாமை மற்றும் பொருளாதார சிக்கல் நிலைமை காரணமாக இருந்ததாக | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

11 செலவின விடயங்களில் 23 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அவற்றை அடைந்து கொள்வதற்கும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு குறிகாட்டிகள் இனங் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதாக | நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நோக்கங்கள் மற்றும் இலக்குகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |